சுருக்கம்

ஆட்சி எல்லை– புதுக்கோட்டை மாவட்டம் – புதுக்கோட்டை வருவாய்க் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து புதியதாக இலுப்பூர் வருவாய் கோட்டம் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [வ.நி.1(1)] துறை

**அரசாணை (நிலை) எண்.378**

**நாள்: 28.9.2013**
**விஜய வருடம், புரட்டாசி 12,**
**திருவள்ளுவர் ஆண்டு 2044**

**படிக்கவும்:**

1. அரசாணை (நிலை) எண்.279, வருவாய், நாள் 9.06.2003
2. அரசாணை (2D) எண்.176, வருவாய் [வ.நி.1(1)] துறை, நாள் 15.6.2012.
3. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5, கடித எண்.பணி.6(4)/ 18464/12 நாள் 7.03.2013.

********

ஆணை:–

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 19.12.2012 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

" புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு புதிய வருவாய் கோட்டம் உருவாக்கப்படும் "

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கையின் அடிப்படையில், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் புதிய இலுப்பூர் வருவாய் கோட்டம் உருவாக்குவது தொடர்பாக தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(i) அரசாணை (நிலை) எண். 279, வருவாய்த் துறை, நாள் 9.6.2003–ன்படி, இலுப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கோட்டம் அமைக்க அரசு நிபந்தனைகள் நிறைவு செய்யப்படுவதால், அரசு நிபந்தனைகளின்படி இலுப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கோட்டம் அமைக்க பரிசீலிக்கலாம். தற்போதுள்ள புதுக்கோட்டை வருவாய் கோட்டத்தில் மொத்தம் 487 வருவாய் கிராமங்கள் அமைந்துள்ளது. இதில் இலுப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு அமையவிருக்கும் புதிய கோட்டத்தில் இலுப்பூர், குளத்தூர், மற்றும் பொன்னமராவதி ஆகிய மூன்று வட்டங்களை உள்ளடக்கியதில் 209 வருவாய் கிராமங்கள் அமைய உள்ளன. மேலும், புதுக்கோட்டை வருவாய் கோட்டத்தின் மொத்த பரப்பளவு 3547.09 ச.கி.மீட்டர். இதில் இலுப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு அமையவிருக்கும் புதிய கோட்டத்தின் உத்தேச பரப்பளவு 1716.01 ச.கி.மீட்டராகும். புதுக்கோட்டை வருவாய் கோட்டத்தின் மொத்த மக்கள் தொகை 12,49,032. இதில் புதிய இலுப்பூர் கோட்டத்தின் மக்கள் தொகை 4,89,979 ஆகும்.

(ii) புதுக்கோட்டை வருவாய் கோட்டத்தைப் பிரித்து புதிய இலுப்பூர் கோட்டம் உருவாக்குதல் குறித்த நிலைப்படிவம் பின்வருமாறு அமைந்துள்ளது.

| வ எண் | ஆட்சி எல்லை விளக்கங்கள் | தற்போது உள்ளபடி கோட்டம் | உத்தேச பிரிவினைக்கு பின் கோட்டம் | | அரசாணை எண்.279, வ.து., நாள் 09.06.2003–ன்படி குறித்த நிலை |
|---|---|---|---|---|---|
| | | புதுக்கோட்டை | உத்தேசிக்கப்பட்ட கோட்டம் | எஞ்சியகோட்டம் | |
| | | | இலுப்பூர் | புதுக்கோட்டை | |
| 1. | தலைமையிடம் | புதுக்கோட்டை | இலுப்பூர் | புதுக்கோட்டை | |
| 2. | பரப்பளவு (ச கி மீ) | 3547.09 ச.கி.மீ | 1667.13 ச.கி.மீ | 1879.96 ச.கி.மீ | குறைந்த அளவு 1000 ச.கி.மீ அதிகளவு 4500 ச.கி.மீ |
| 3. | மக்கள் தொகை | 12,49,032 | 4,71,326 | 7,77,706 | குறைந்த அளவு 4,00,000 முதல் அதிக அளவு 15,00,000 |
| 4. | வருவாய் கோட்டத்தின் பெயர் | புதுக்கோட்டை | இலுப்பூர் | புதுக்கோட்டை | |
| 5. | சட்டமன்ற தொகுதியின் பெயர் | 178 கந்தர்வக் கோட்டை<br>179 விராலிமலை<br>180 புதுக்கோட்டை<br>181 திருமயம்<br>182 ஆலங்குடி | | | |
| 6. | பாராளுமன்ற தொகுதியின் பெயர் | 31–சிவகங்கை<br>24–திருச்சி<br>23–கரூர் | | | |
| 7. | நகராட்சி எண்ணிக்கை/ பெயர் | 01 புதுக்கோட்டை | | 01–புதுக்கோட்டை | |
| 8. | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | 1.திருவரங்குளம்<br>2திருமயம்<br>3அரிமளம்<br>4புதுக்கோட்டை<br>5கந்தர்வக்கோட்டை<br>6பொன்னமராவதி<br>7குன்னான்டார்கோவில்<br>8விராலிமலை<br>9அன்னவாசல்<br>10கறம்பக்குடி<br>10 | 1.விராலிமலை<br>2.அன்னவாசல்<br>3.குன்னாண்டார் கோவில்<br>4.பொன்னமராவதி<br>04 | 1.திருவரங்குளம்<br>2.திருமயம்<br>3.அரிமளம்<br>4.புதுக்கோட்டை<br>5.கறம்பக்குடி<br>6.கந்தர்வக் கோட்டை<br>06 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | சிறப்பு பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை (பெயருடன்) | 1.ஆலங்குடி<br>2.கீரமங்கலம்<br>3.அரிமளம்<br>4.பொன்னமராவதி<br>5.கறம்பக்குடி<br>6.இலுப்பூர்<br>7.அன்னவாசல்<br>8.கீரனூர்<br>08 | 1.இலுப்பூர்<br>2.அன்னவாசல்<br>3.கீரனூர்<br>4.பொன்னமராவதி<br>04 | 1.ஆலங்குடி<br>2.கீரமங்கலம்<br>3.அரிமளம்<br>4.கறம்பக்குடி<br>04 | |
| 10. | வட்டங்களின் எண்ணிக்கை/ பெயர் | 1.ஆலங்குடி<br>2.கந்தர்வக்கோட்டை<br>3.புதுக்கோட்டை<br>4.திருமயம்<br>5.குளத்தூர்<br>6.இலுப்பூர்<br>7கறம்பக்குடி<br>8.பொன்னமராவதி<br>08 | 1.இலுப்பூர்<br>2.குளத்தூர்<br>3.பொன்னமராவதி<br>03 | 1.ஆலங்குடி<br>2.புதுக்கோட்டை<br>3.திருமயம்<br>4.கறம்பக்குடி<br>5.கந்தர்வக் கோட்டை<br>05 | குறைந்த அளவு 2 வட்டங்கள் |
| 11. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 487<br>1.ஆலங்குடி — 73<br>2.புதுக்கோட்டை — 39<br>3.திருமயம் — 80<br>4.கறம்பக்குடி — 49<br>5.பொன்னமரா–வதி — 49<br>6.குளத்தூர் — 73<br>7.இலுப்பூர் — 87<br>8.கந்தர்வக்–கோட்டை — 37<br>487 | 209<br>1.இலுப்பூர் — 87<br>2.குளத்தூர் — 73<br>3. பொன்ன–மராவதி — 49<br>209 | 278<br>1.ஆலங்குடி — 73<br>2.புதுக்–கோட்டை — 39<br>3.திருமயம் — 80<br>4.கறம்பக்குடி — 49<br>5.கந்தர்வக் – கோட்டை — 37<br>278 | குறைந்த அளவு 100 கிராமங்கள் |
| 12. | கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை | 384 | 166 | 218 | |
| 13 | தலைமையிடத்தி–லிருந்து வெகு தொலைவில் உள்ள கிராமத்தின் தூரம் | தற்போது உள்ளபடி கோட்டம் | உத்தேச பிரிவினைக்கு பின் கோட்டம் | எஞ்சியகோட்டம் | அரசாணை எண். 279, வருவாய்த் துறை நாள் 9.6.2003–ன் படி குறித்த நிலை |

| | | தலைமை இடம் | வெகு தூரத்தில் உள்ள கிராமம் கி.மீ | தலைமை இடம் | வெகு தூரத்தில் உள்ள கிராமம் கி.மீ | தலைமை இடம் | வெகு தூரத்தில் உள்ள கிராமம் கி.மீ |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஆலங்குடி | ஆலங்குடி | குலமங்கலம் –32 | குளத்தூர் | உச்சாணி–32<br>மின்னாத்தூர் –25<br>செங்களூர்–22<br>சூரியூர்–20 | ஆலங்குடி | குலமங்கலம்– 32 |
| 2. | புதுக்கோட்டை | புதுக் கோட்டை | தொண்டைமான் –24<br>கணபதிபுரம்–22<br>கல்லுக்காரன் பட்டி–20 | இலுப்பூர் | மீனவேலி–30<br>ராஜாளிப்பட்டி–25<br>கோமங்கலம்–25<br>குன்னாத்தூர்–25<br>அகரப்பட்டி–25 | புதுக்கோட்டை | தொண்டைமான் ஊரானி–24<br>கணபதிபுரம்– 22<br>கல்லுக்காரன் பட்டி–20 |
| 3. | திருமயம் | திருமயம் | வாழற மாணிக்கம் –40 | கந்தர்வ– கோட்டை | ஆத்தங்கரை விடுதி–25<br>துவார்–23<br>குளத்தூர் நாயக்கர்பட்டி–23 | திருமயம் | வாழற மாணிக்கம் –40 |
| 4. | கறம்பக்குடி | கறம்பக்குடி | கிராத்தூர்–25<br>தட்டாமலைப் பட்டி–25<br>மாங்கோட்டை– 20<br>கலம்பம்–20 | – | – | கறம்பக்குடி | கீராத்தூர்–25<br>தட்டாமலைப் பட்டி–20<br>மாங்கோட்டை –20<br>கலம்பம்–20 |
| 5. | பொன்னமராவதி | பொன்ன– மராவதி | ஆர்.பால குறிச்சி –22<br>ஒலியமங்கலம்2 5<br>சித்தூர் –28 | – | – | பொன்ன– மராவதி | ஆர்.பால குறிச்சி –22<br>ஒலியமங்கலம்–2<br>சித்தூர் –28 |
| 6. | குளத்தூர் | குளத்தூர் | உச்சாணி–32<br>மின்னாத்தூர்–26<br>செங்களூர்–22<br>சூரியூர்–20 | – | – | – | – |

(iii) புதிதாக உருவாக்கப்பட உள்ள இலுப்பூர் கோட்டத்திற்கு ஒப்பளிப்பு செய்யவேண்டிய பணியிட விவரங்கள் பின்வருமாறு:–

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | புதுக்கோட்டை வருவாய் கோட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | புதுக்கோட்டை வருவாய் கோட்டத்தில் நிறுத்திவைக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | இலுப்பூர் வருவாய் கோட்டத்திற்கு மாற்றப்படும் பணியிடங்கள் | இலுப்பூர் வருவாய் கோட்டத்திற்கு தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் | இலுப்பூர் வருவாய் கோட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட வேண்டிய மொத்தப் பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | வருவாய் கோட்ட அலுவலர் | 1 | 1 | - | 1 | 1 |
| 2. | வருவாய்கோட்ட அலுவலரின் நேர்முக உதவியாளர் (வட்டாட்சியர் நிலை) | 1 | 1 | - | 1 | 1 |
| 3. | தலைமை உதவியாளர் (துணை வட்டாட்சியர் நிலை) | 1 | 1 | - | 1 | 1 |
| 4. | உதவியாளர் | 5 | 3 | 2 | 1 | 3 |
| 5. | இளநிலை உதவியாளர் | 5 | 3 | 2 | - | 2 |
| 6. | தட்டச்சர் | 1 | 1 | - | 1 | 1 |
| 7. | சுருக்கெழுத்தர் | 1 | 1 | - | 1 | 1 |
| 8. | பதிவறை எழுத்தர் | 3 | 2 | 1 | - | 1 |
| 9. | அலுவலக உதவியாளர் | 4 | 2 | 2 | - | 2 |
| 10. | ஈப்பு ஓட்டுநர் | 1 | 1 | - | 1 | 1 |
| 11. | இரவுக் காவலர் | 1 | 1 | - | 1 | 1 |
| 12. | மசால்ஜி | 2 | 1 | 1 | - | 1 |
| 13. | தோட்டக்காரர் | 2 | 1 | 1 | - | 1 |
| | மொத்தம் | **28** | **19** | **9** | **8** | **17** |

(iv) புதியதாக தோற்றுவிக்கப்பட உள்ள இலுப்பூர் கோட்டத்திற்கு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் மற்றும் தொடரா செலவினம் பின்வருமாறு:—

**I. தொடரும் செலவினங்கள்**

| வ. எண் | விவரம் | தொகை (ரூ). |
|---|---|---|
| 1 | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (ஆண்டொன்றுக்கு) | 57,29,016 |
| 2 | மின்சாரக் கட்டணம் (ஆண்டொன்றுக்கு) | 2,10,000 |
| 3 | எரிபொருள் (டீசல்) (ஆண்டொன்றுக்கு) (165 லி ரூ.50 X 12 மாதங்கள்) | 99,000 |
| 4 | தொலைபேசி கட்டணம் (ஆண்டொன்றுக்கு) | 58,000 |
| 5 | கட்டட வாடகை | 3,00,000 |
| 6 | ஈப்பு பராமரிப்பு செலவு | 7,000 |
| 7 | கணினி பராமரிப்பு செலவு | 8,000 |
| | மொத்தம் | **64,11,016** |

**II. தொடரா செலவினங்கள்**

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை | தொகை (ரூ). |
|---|---|---|---|
| 1 | அலுவலக கட்டிடம் | 1 | 1,40,00 ,000 |
| 2 | கோட்டாட்சியர் குடியிருப்பு | 1 | 28,00,000 |
| 3 | தளவாடங்கள் | - | 3,00,000 |
| 4 | ஈப்பு | - | 6,00,000 |
| 5 | தொலைபேசி இணைப்பு | 2 | 10,000 |
| 6 | கணினி | 3 | 1,05,000 |
| 7 | பிரிண்டர் (அச்சுப்பதிப்பு) இயந்திரம் | 3 | 30,000 |
| 8 | ஜெராக்ஸ் (நகல்) இயந்திரம் | 1 | 80,000 |
| 9 | பேக்ஸ் | 1 | 20,000 |
| 10 | குளிர்சாதனம் | 1 | 35,000 |
| 11 | தீயணைப்பான் | 4 | 28,000 |
| | மொத்தம் | | **1,80,08,000** |

3. மேலே விவரிக்கப்பட்டவாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் பரிந்துரையை அரசு நன்கு ஆராய்ந்து கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) புதுக்கோட்டை வருவாய் கோட்டத்தைப் பிரித்து புதிய இலுப்பூர் கோட்டம் உருவாக்கி அரசு ஆணையிடுகிறது.

(ii) புதிய இலுப்பூர் வருவாய் கோட்டத்திற்கு அரசு கடித எண்.40151/வ.நி.1(1)/1996–4, வருவாய், நாள் 4.9.1997 (Standard Pattern)–இன்படி, இணைப்பு–II-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 9 பணியிடங்கள் Redeployment மூலமும் 6 பணியிடங்கள் புதியதாகவும் மொத்தம் 15 பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(iii) புதியதாக தோற்றுவிக்கப்பட உள்ள இலுப்பூர் கோட்டத்திற்கு இணைப்பு–III-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினம் ரூ.47,69,512/–(ரூபாய் நாற்பத்தேழு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து ஐநூற்று பன்னிரண்டு மட்டும்) மற்றும் தொடரா செலவினமாக ரூ. 10,26,000/– (ரூபாய் பத்து இலட்சத்து இருபத்தாறாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

4. மேலே பத்தி 3(iii) ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்க வேண்டும்.

(I) பணியாளர் சம்பளங்கள் ரூ.43,81,012 /–

2053 00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு –I திட்டத்தில் சேராதது –AA உட்கோட்டப் பணியாளரமைப்பு – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2053 00 094 AA - 0104)

II 2053 00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு –I திட்டத்தில் சேராதது – AA உட்கோட்டப் பணியாளரமைப்பு

(அ) 05 அலுவலக செலவுகள் 01 தொலைப்பேசி கட்டணங்கள்
கூடுதல் ரூ.31,500/– [தொடரும் செலவினம் ரூ.25,500/–
மற்றும் தொடராச் செலவினம் ரூ.6000/–]
(த.தொ.கு 2053 00 094 AA - 0515)

(ஆ) 05 அலுவலக செலவுகள் 03 மின் கட்டணங்கள்
(ரூ.1,20,000/–)
(த.தொ.கு 2053 00 094 AA - 0533)

(இ) 05 05 அறைகலன்கள் ரூ. 2,00,000/–
05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்
(த.தொ.கு 2053 00 094 AA - 0551)

(ஈ) 06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் 01 வாடகை
ரூ. 1,44,000/– தொடரும் செலவினம்
(த.தொ.கு 2053 00 094 AA 0613)

(உ) 19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் ரூ. 1,20,000/–
01. வாங்குதல்
(த.தொ.கு 2053 00 094 AA 1907)

(ஊ) 21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ. 6,00,000/–
(த.தொ.கு 2053 00 094 AA 2111)

(எ) பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய்
ரூ. 99,000/–
(த.தொ.கு 2053 00 094 AA 4502)

(ஏ) 76 கணிணியும் துணை பாகங்களும் 01 வாங்குதல்
ரூ.1,00,000/–
(த.தொ.கு 2053 00 094 AA 7616)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுத் துணைபணியாகும் (New Instrument of Services) இதற்கான சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையுடன் நிதி (வ.செ.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும் பொருட்டு உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதி (வ.செ.பொ.1) துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் /வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. மேலும் அலுவலகக் கட்டடம், மற்றும் கோட்டாட்சியர் குடியிருப்புக்கான செலவினத்திற்கு தனியாக கருத்துருவினை அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.54863/நிதி (மை.ம.ஆ.பி)/2013 நாள் 28.09.2013–இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.1440 (ஆயிரத்து நானூற்று நாற்பது).

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்.

பெறுநர்
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 600 079
(சிறப்பு அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர்/நில நிர்வாக ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர்/நிலச் சீர்திருத்த ஆணையர்,சென்னை–5.
குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர் / ஆணையர் மற்றும் இயக்குநர்,
நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–5.
மாவட்ட ஆட்சித்தலைவர், புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை.
மாவட்ட கருவூல அலுவலர், புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை.
மாநில கணக்காயர் (A&E), சென்னை–18.

மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை—18. (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை—18.
மாநில கணக்காயர் (CAG) சென்னை—9.
இயக்குநர். எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை—2.
அனைத்துத் துறை தலைவர்கள் / அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
இயக்குநர். தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை—9.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை—104.
முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை—9.
தலைமை தேர்தல் அதிகாரி, பொது (தேர்தல்கள்) துறை, சென்னை—9.
ஆணையர், கருவூலக்கணக்கு துறை, சென்னை—15.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை—9.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை—9.
செயலாளர், வருவாய்த்துறை அவர்களின் தனிச் செயலாளர், சென்னை—9.
நிதி (வ.செ.பொது—I/பொது—II/வருவாய்(கக—I)/பொதுப்பணி-I/மை.மஆபி)துறை, சென்னை—9.
இகோ/உதிரி —2

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

## இணைப்பு –I

**அரசாணை (நிலை) எண். 378, வருவாய்த்துறை, நாள் 28.09.2013**

**அறிவிக்கை**

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை வருவாய் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து புதியதாக இலுப்பூர் வருவாய் கோட்டம் 2013ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 28–ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வட்டங்களைத் தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. புதியதாக உருவாக்கப்படும் இலுப்பூர் வருவாய் கோட்டத்தை உள்ளடங்கும் வட்டங்கள். அவ்வட்டங்களில் அடங்கும் வருவாய் கிராமங்கள் மீது தற்போது புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியரால் 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28– ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

**அட்டவணை**

| வ.எண். | வருவாய் கோட்டத்தின் பெயர் | உள்வட்டங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | இலுப்பூர் | 1. இலுப்பூர்<br>2. குளத்தூர்<br>3. பொன்னமராவதி |

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

## இணைப்பு –II

**அரசாணை (நிலை) எண். 378, வருவாய்த்துறை, நாள் 28.09.2013**

**இலுப்பூர் வருவாய் கோட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்**

| பணியிடத்தின் பெயர் | ஊதிய விகிதம் | Standard Pattern–இன்படி ஒப்பளிப்பு செய்யப்படவேண்டிய பணியிடங்கள் | மறுபரவலமர்த்தல் மூலம் இலுப்பூர் வருவாய் கோட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட உள்ள பணியிடங்கள் | இலுப்பூர் வருவாய் கோட்டத்திற்கு தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| வருவாய் கோட்ட அலுவலர் | 15600-39100 +5400 | 1 | - | 1 |
| வருவாய் கோட்ட அலுவலரின் நேர்முக உதவியாளர் (வட்டாட்சியர் நிலை) | 9300-34800 +5100+ ரூ.1000 சிறப்புப்படி | 1 | - | 1 |
| உதவியாளர் | 5200-20200 +2800 | 3 | 2 | 1 |
| இளநிலை உதவியாளர் | 5200-20200 +2400 | 2 | 2 | - |
| தட்டச்சர் | 5200-20200 +2400 | 1 | - | 1 |
| பதிவுறு எழுத்தர் | 4800-10000 +1400 | 1 | 1 | - |
| ஓட்டுநர் | 5200-20200 +2400 | 1 | - | 1 |
| அலுவலக உதவியாளர் | 4800-10000 +1300 | 2 | 2 | - |
| காவலர் (Night Watchman) | 4800-10000 +1300 | 1 | - | 1 |
| மசால்சி | 4800-10000 +1300 | - | 1 | - |
| தோட்டக்காரர் | 4800-10000 +1300 | - | 1 | - |
| மொத்தம் | | **13** | **9** | **6** |

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

## இணைப்பு –III

அரசாணை (நிலை) எண். 378, வருவாய்த்துறை, நாள் 28.09.2013

### தொடரும் செலவினங்கள்

| வ. எண் | விவரம் (ஆண்டொன்றுக்கு) | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் | 43,81,012 |
| 2 | வாடகை | 1,44,000 |
| 3 | மின்சாரக் கட்டணம் | 1,20,000 |
| 4 | எரிபொருள் (டீசல்) | 99,000 |
| 5 | தொலைபேசி கட்டணம் | 25,500 |
| 6 | ஈப்பு பராமரிப்பு செலவு | 0 |
| 7 | கணினி பராமரிப்பு செலவு | 0 |
| | மொத்தம் | 47,69,512 |

### தொடராச் செலவினங்கள்

| வ. எண் | விவரம் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | அலுவலகக் கட்டிடம் | -- |
| 2 | வட்டாட்சியர் குடியிருப்பு | -- |
| 3 | தளவாடங்கள் | 2,00,000 |
| 4 | ஈப்பு | 6,00,000 |
| 5 | தொலைபேசி இணைப்பு | 6,000 |
| 6 | கணினி | 75,000 |
| 7 | பிரிண்டர் (அச்சுப் பதிப்பு) இயந்திரம் | 25,000 |
| 8 | ஜெராக்ஸ்(நகல்) இயந்திரம் | 65,000 |
| 9 | பேக்ஸ் | 10,000 |
| 10 | குளிர்சாதனம் | 25,000 |
| 11 | தீயணைப்பான் | 20,000 |
| | மொத்தம் | 10,26,000 |

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்